முக்கிய வார்த்தைகள்:
*இஸ்திதாஅத்*
*சக்தி / ஆற்றல்*
*ஹஜ்*
*வணக்கம்*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**22 மே 2026 / 05 துல்ஹஜ் ஹிஜிரி 1447**

# <u>வணக்கத்தை நிறைவேற்ற இஸ்திதாஅத் [சக்தி] பெற்றிருப்பது</u>

**ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّهُ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.**

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலமாகவும், அல்லாஹ் தடைசெய்துள்ள விஷயங்க ளிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீது "தக்வா" [பக்தியை] ஏற்படுத்திக் கொள்வோமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமக்கு அருள் புரிவானாக! **ஹஜ்ஜுக்** கடமையையும், இஸ்லாத்தின் மற்ற கடமைகளையும், ஏற்றுக் கொள்ளப்பட்ட **வணக்கங்களையும்** நற்காரியங்களையும் முடிந்த அளவு சிறப்பாக நிறைவேற்றுவதற்கான **இஸ்திதாஅத்** தை, **ஆற்றலைப்** பெற்று, நிறைவேற்றி வரும் பாசத்திற்குரிய நமது ஹஜ் பயணிகளுக்கும் அருள் புரிவானாக! எல்லாம் வல்ல அல்லாஹ், அதற்கான ஆற்றலை அவர்களுக்கு மேற்கொண்டு அதிகமாக வழங்கி, அருள் புரிவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அல்-பகரா" எனும் அத்தியாயத்தின் 286-வது வசனத்தில் கூறுகிறான்:

لَا يُكَلِّفُ ٱللَّهُ نَفْسًا إِلَّا وُسْعَهَا ۚ

பொருள்: "அல்லாஹ் எந்த ஓர் ஆத்மாவுக்கும் அது **தாங்கிக் கொள்ள** முடியாத அளவு கஷ்டத்தைக் கொடுப்பதில்லை"

சகோதரர்களே! தற்போது ஓதப்பட்ட வசனமாகிறது, பொதுவாக வாழ்க்கைச் சோதனைகளுடன் தொடர்புடையதாக இருக்கின்றது. நமது **தாங்கும் சக்தியை** விடக் கடுமையான சுமையை, கஷ்டத்தை நமக்கு அல்லாஹ் ஏற்படுத்துவதில்லை எனக் கூறுகிறது; அல்லாஹ்வின் இந்த அணுகுமுறை, நமது ஆன்மீக முன்னேற்றத்தில் நம்மைக் கவனம் செலுத்தத் தூண்டுகிறது.

அதே சமயம், இமாம் அல்-குர்துபி [ரஹ்], இமாம் அத்-தபரீ [ரஹ்] போன்ற ஆரம்ப கால திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள், இவ்வசனம் சம்பந்தமாகக் கருத்துத் தெரிவிக்கையில்: அடியார்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள **வணக்க வழிபாட்டுச்** செயல்கள் அனைத்தும் அவர்களின் **சக்திக்கு** உட்பட்ட தாகவே உள்ளன என்பதைச் சுட்டிக் காட்டுவதாக இவ்வசனம் உள்ளது எனக் கூறியுள்ளார்கள். **வணக்க வழிபாட்டுச்** செயல்களை நிறைவேற்றுவதில் காணப்படும் அந்த **சக்திக்கும்** ஆற்றலுக்கும் **இஸ்திதாஅத்** என அரபியில் கூறப்படுகிறது.

**அன்பிற்குரிய சகோதரர்களே!**
மிகவும் எளிதாக மொழியப்படும் நமது ஈமான் எனும் ஓரிறை நம்பிக்கையின் இரண்டு பிரகடனங்களாகிய "லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்" என்பதை அடுத்து உள்ள இஸ்லாத்தின் ஒவ்வொரு தூணையும் கடமையையும் நிறைவேற்றுவதில் **இஸ்திதாஅத்**

அதாவது, நிறைவேற்ற முடிகின்ற **சக்தி** அடியார்களிடம் காணப்படுகிறது. எக்கடமையும் நிறைவேற்ற முடியாது என்ற நிலையில் இல்லை. உதாரணமாக, நின்று தொழுவதற்கு **சக்தி** பெறாத ஒருவர், உட்கார்ந்து தொழுகலாம். நோன்பின் காலத்தில் நோயாளியாக இருப்பவர் நோன்பு நோற்பதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறார்; **நிஸாப்** எனப்படும் குறிப்பிட்ட அளவு பொருளாதார வசதியைப் பெற்றுள்ளவருக்கே ஜகாத் எனும் கடமையை நிறைவேற்றுவது அவசியமாகும்; அதுவும் அப்பொருள் அவரிடம் ஓர் ஆண்டு முழுவதும் இருந்திருக்க வேண்டும்; இதற்கு அரபியில் *"ஹவ்ல்"* எனப்படுகிறது. உடல் ரீதியாகவும் மன ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் ஆற்றல் பெற்று, **ஹஜ்ஜுக்** கடமையை நிறைவேற்றுவதற்குத் தேவையான **சக்தி** பெற்றுள்ளவருக்கே ஹஜ் கடமையாகும்.

இந்த உதாரணங்களெல்லாம், இஸ்லாமியக் கடமைகளும், **வணக்க வழிப்பாட்டுச்** செயல்களும் நிறைவேற்றப்படுவதற்கு எளிதாக்கப்பட்டுள்ளன எனச் சுட்டிக் காட்டுகின்றன. இவ்விஷயம், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் கிருபை மிக விசாலமானது எனச் சுட்டிக் காட்டுவதாக இருக்கின்றதல்லவா?

சகோதரர்களே! மனிதனின் வரையறுக்கப்பட்ட **சக்தியையும்**, ஆற்றலையும் மறுபுறம், அல்லாஹ்வின் விசாலமான கிருபையையும் திருக்குர்ஆனின் "அன்னிஸா" எனும் அத்தியாயத்தின் 28-வது வசனத்தில் பின்வருமாறு அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு நினைவூட்டுகின்றான்:

يُرِيدُ ٱللَّهُ أَن يُخَفِّفَ عَنكُمْۚ وَخُلِقَ ٱلْإِنسَٰنُ ضَعِيفًا ٢٨

பொருள்: "அன்றியும், அல்லாஹ் [உங்களுடைய கஷ்டங்களை] உங்களுக்கு இலேசாக்கவே விரும்புகிறான்; ஏனெனில், மனிதன் பலஹீனமான வனாகவே படைக்கப்பட்டுள்ளான்"

**அன்பிற்குரிய சகோதரர்களே**!

**இஸ்திதாஅத் தை** [சக்தியை] நாம் இழப்பதன் காரணமாக, **வணக்க வழிபாட்டுச்** செயல்களை நிறைவேற்றுவதில் கஷ்டத்தை நாம் எதிர்கொண்டால், பின்வரும் மூன்று விஷயங்களை நாம் கவனத்தில் கொள்வது அவசியமாகும்:

**முதலாவதாக: இஸ்திதாஅத் எனப்படும் சக்தி பெற்றிருக்கும் நிலையானது, அல்லாஹ்வுடைய கட்டளையின் ஒரு பகுதியாகும்.**

ஒருவர், தனது ஏதாவதொரு வயதில் உடல் ரீதியிலான **சக்தியையும்**, பொருளாதார நிலைத்தன்மையையும், மன ரீதியிலான **ஆற்றலையும்** இழக்க வாய்ப்புள்ளது. இது போன்ற சோதனைகளை நாம் எதிர்கொள்ளும் போது, **இஸ்திதாஅத் தை** [சக்தி பெற்றிருக்கும் நிலையை] நாம் இழப்பதும் கூட, அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள நியதிகளில், கட்டளைகளில் ஒரு பகுதியாகும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஒரு ஓரிறை நம்பிக்கையாளர், அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள விதி மற்றும் கட்டளை விஷயத்தில் அதிருப்தியடையக் கூடாது. மாறாக பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்; ஏற்கனவே வழங்கப்பட்ட **சக்திக்காகவும்,** தற்போது தன்னிடமுள்ள **சக்திக்காகவு**ம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். தொடர்ந்து மனப்பூர்வமாக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்து கொண்டிருக்க வேண்டும்.

**இரண்டாவதாக: இஸ்திதாஅத் குறைவதானது, அதாவது, நம்மிடம் சக்தி குறைவதானது, நற்காரியங்களைச் செய்வதற்கான வாய்ப்பை நாம் இழப்பதற்கான அறிகுறி என நினைக்கக் கூடாது**

குறிப்பிட்ட **வணக்க வழிபாட்டுச்** செயல்களை, ஒருவர் நிறைவேற்ற முடியாமலாகி விடுவதானது, அல்லாஹ்வின் பக்கம் அவர் நெருங்க முடியாமலாகி விடுகின்றார் என்பது பொருளல்ல. அவ்வாறே, **வணக்க வழிபாட்டுச்** செயல்களை நிறைவேற்றும் **ஆற்றலைப்** பெற்றிருப்பவர் நிச்சயம் அல்லாஹ்வின் பக்கம் நெருக்கமானவராக ஆகி விடுவார் என்பதும் பொருளல்ல. உதாரணமாக, நிதி நெருக்கடியின் காரணமாக ஒருவரால்

*குர்பானி* கொடுக்க முடியவில்லை; அதன் காரணமாக அவர் அல்லாஹ்வின் நற்கூலியைப் பெறுவதற்கான வாய்ப்பை இழந்து விட்டார் என்பது பொருளல்ல; இப்படிப்பட்டவர் பொறுமையாக இருப்பதும், அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்திக் கொண்டிருப்பதும், மற்ற **வணக்க வழிபாட்டுச்** செயல்களை மனப்பூர்வமாக நிறைவேற்றி வருவதும் அல்லாஹ்வின் பார்வையில் உயர்ந்த செயல்களாகக் கருதப்படும்; அவற்றின் மூலம் அவர் நற்கூலிகளை அடைந்து கொள்வார்.

**மூன்றாவதாக: ஒருவருக்கு வணக்க, வழிபாட்டுச் செயல்களை நிறைவேற்றுவதற்கான இஸ்திதாஅத், அதாவது, அதற்கான சக்தி குறைவாகக் காணப்படுவதானது, அல்லாஹ்வின் அன்பு அவருக்குக் கிடைக்காமலாகி விடுவதற்கான அறிகுறி எனவும் கருதக் கூடாது**

வணக்க வழிபாட்டுச் செயல்களை நிறைவேற்றும் **ஆற்றல்** பெற்றுள்ளவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, அச்செயல்களை நன்றாக நிறைவேற்ற **முடியாமலிருக்கும்** நமக்கு அல்லாஹ்வின் அன்பு குறைவாகவேக் கிடைக்கும் எனச் சிலர் கருதலாம். **வணக்க வழிபாடுகளை** நிறைவேற்றுவதற்கு மிகக் குறைவான வாய்ப்புகளைப் பெற்றுள்ள சிலர், உதாரணமாக, **ஹஜ்** செய்வதற்கான வாய்ப்பை இறுதியாகவும், ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்ற முடியாத அளவுக்குப் பாதிக்கப்பட்ட பின்பும், **ஹஜ்** செய்வதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளவர்கள், அல்லாஹ்வின் அன்பு நம்மிடமிருந்து பறிக்கப்பட்ட தற்கான அடையாளம் இது என நினைக்கின்றார்கள். *வல் இயாது பில்லாஹ்,* இம்மாதிரியான சிந்தனையை விட்டும் அல்லாஹ்விடம் நாம் பாதுகாவல் தேடுகிறோம்; இம்மாதிரியான சிந்தனை முற்றிலும் தவறானதாகும்.

இது போன்ற சூழ்நிலைகளில், இவற்றின் பின்னணியில் உள்ள தத்துவத்தை அல்லாஹ்வே அறிவான் என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். உள்ளத்தைப் பரிசுத்தமாக்குவதற்காகவும், நம்மிடம் கவனக்குறைவு காணப்படுகிறது என்பதை நமக்கு நினைவூட்டுவதற் காகவும் அல்லது அதிகக் கிருபையை அடைவதற்கு முன்பாக, நமது ஆன்மாவைத் தயார் செய்வதற்காகவும் இது போன்ற சூழ்நிலைகள் நமக்கு ஏற்படலாம்.

இவற்றின் பின்னணியில் உள்ள தத்துவத்தை நம்மால் அறிந்து கொள்ள முடியவில்லையெனில், எது நமக்கு நல்லது என்பதை அல்லாஹ் அறிந்தவனாக இருக்கின்றான் எனவும்,. உண்மையில், இவையெல்லாம் அல்லாஹ் நம்மீது ஆழமாக அன்பு கொண்டுள்ளான் என்பதற்கான அடையாளம் எனவும் நாம் நினைக்க வேண்டும்.

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

**ஹஜ்ஜின்** காலங்கள் வருவதை முன்னிட்டு, **ஹஜ்ஜுக்** கடமையானது **இஸ்திதாஅத்** பெற்றுள்ளவர்களுக்கு மட்டுமே, அதாவது, உடல் ரீதியிலும் பொருளாதாரம் மற்றும் மன ரீதியிலும் **சக்தி** பெற்றுள்ளவர்களுக்கும், **இஸ்திதாஅத்** பெற்றுள்ளவர்களுக்கும் மட்டுமே கடமையாகும் என இந்த பிரசங்க மேடை நினைவூட்டுகிறது.

உண்மையில், **ஹஜ்** என்பது அல்லாஹ்வின் புறத்திலிருந்து விடுக்கப்படும் ஓர் அழைப்பாகும்; அந்த அழைப்பு இன்னும் நமக்குக் கிடைக்கவில்லை யெனில், அல்லாஹ்வின் கிருபை விஷயத்தில் நாம் நிராசையாகக் கூடாது; அல்லாஹ்வின் விஷயத்தில் தவறான எண்ணம் கொள்வது கூடாது. *ஹதீதுல் குத்ஸி* ஒன்றை நாம் நினைவில் கொள்வோமாக! அதாவது, அல்லாஹ் கூறுவதாக இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:
”அல்லாஹ் வாகிய நான், என் அடியார் எப்படி நினைக்கின்றானோ அப்படி இருக்கின்றேன்; என் அடியார் என்னை எப்போது நினைவில் கொள்கிறாரோ அப்போது அவருடன் நான் இருக்கின்றேன்” [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்]

**அன்பிற்குரிய சகோதரர்களே!**

இறுதியாக, நாம் எப்போதும் **வணக்க வழிபாடுகளையும்** நற்காரியங்களையும் நிறைவேற்றுவதற்கான **இஸ்திதாஅத்** தை, அதாவது, **சக்தியை** வழங்கப்பட வேண்டுமென அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வோமாக! அதே சமயம், புனிதப் பூமியில் **ஹஜ்ஜுக்** கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் ஹாஜிகள், தொடர்ந்து அல்லாஹ்வின் பாதுகாப்பில் இருக்க வேண்டுமென்றும், அனைத்துவிதமான கஷ்டங்கள்

மற்றும் தீங்குகளை விட்டும் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்றும் பிரார்த்தனை செய்வோமாக! அவ்வாறே, ஒருநாள் நாம் அனைவரும் புனிதப் பூமியில் அல்லாஹ்வின் விருந்தாளிகளாக ஆக வேண்டும்; அதற்கான **இஸ்திதாஅத்** நமக்கு வழங்கப்பட வேண்டுமென்றும் *அல்லாஹ் அஜ்ஜ வஜல்ல* விடம் பிரார்த்தனை செய்வோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

**இரண்டாவது பிரசங்கம்**

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالحَرْبَ وَالِاعْتِدَاءَ. اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا المُسْتَضْعَفِينَ فِي غَزَّة وَفِي فِلسْطِينَ، وَفِي كُلِّ مَكَانٍ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ فَرَجًا، وَاكْتُبِ السِّلْمَ

وَالسَّلاَمِ وَالأَمْنَ وَالأَمانَ لِلْعالَمِ كُلِّهِ وَلِلنّاسِ أَجْمعِينَ. رَبَّنا آتِنا فِي الدُّنيا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنا عَذابَ النّارِ.

عِبادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتاءِ ذِي القُرْبى، وَيَنْهى عَنِ الفَحْشَاءِ وَالمُنكرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ ما تَصْنَعُونَ.